தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 136

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: கார்த்திகை 5உ வெள்ளி (20—11—53) ★ ★ ★ வெளியீடு: கார்த்திகை 6உ சனி (21—11—53)

ஆர். வெங்கிடராம அய்யரும், கிருஷ்ணசாமி அய்யங்காரும் மது போதையில் சிக்கினர்!

வேறு இலட்சுமணன் செட்டியாரும் கைது செய்யப்பட்டார்!

விஸ்கி 9 புட்டி! பீர் 33 புட்டி!! சாம்பான் 1 புட்டி!!!
10 காலி புட்டிகள் !!!

சிரி கிருஷ்ணா பிக்சர்ஸ் மாளிகை மது கிடங்காகக் காட்சியளித்தது!

சென்னை, நவ. 19—

நேற்றிரவு தியாகராய நகரிலுள்ள கிருஷ்ணா பிக்சர்ஸ் மாளிகையில், மதுவிலக்குப் பரிசோதனை நடைபெற்றபோது, ஏராளமான வெளிநாட்டு உயர்ந்த ரக மதுபான வகைகள் கைப்பற்றப்பட்டன. இது சம்பந்தமாக பிரபல திரைப் படத் தயாரிப்பாளரான மானகிரி லெட்சுமணன் செட்டியார், அட்வகேட் ஆர் வெங்கட்டராமய்யர், ஜி எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று இரவு, சென்னை நகர் டெபுடி கமிஷனர் எல் ஆர். அடிகே, உதவி கமிஷனர் சேது மாதவமேனன், மதுவிலக்கு அதிகாரி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தலைமையில் போலீஸ் படையினரும் மேல் குறிப்பிட்ட மாளிகையைச் சோதனையிட்டனர்.

அந்த நேரத்தில் குடித்துக் கொண்டிருந்த இருவரும், மற்ற இருவரும் கைது செய்யப்பட்டார்கள்.

கைப்பற்றப்பட்ட மதுவகைகள் வெளிநாட்டுச் சரக்கில் சிறந்த வகை என்று சொல்லப்படுகிறது. அவைகளில் 9 புட்டி விஸ்கி; 33 புட்டி பீர்; ஒரு புட்டி ஷாம்பேன் இருந்தன.

மாளிகையை போலீசார் சோதனையிட்டதில், கட்டிடத்தின் பல்வேறு பகுதிகளிலும் மது புட்டிகள் காணப்பட்டன. மாடியிலுள்ள 'பிரிஜிடயரி'லிருந்து சில புட்டிகளும் பிலிம் பரிசோதனை கூடத்திலிருந்து சில புட்டிகளும் கைப்பற்றப்பட்டன.

பாதி குடித்துக்கிடந்த புட்டிகளும், 100 காலி புட்டிகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் ஜாமீனில் விடப்பட்டுள்ளனர்.

கல்கத்தாவில் நெருக்கடி!

கல்கத்தாவில் 1 சதுர மைலில் சராசரி [illegible],000 பேர் வசிக்கின்றனர். [illegible] உலகத்திலேயே மிகவும் நெருக்கமான இரண்டாவது நகரம் [illegible]. இதன் மக்கட் தொகை [illegible],50,000.

காமராஜ்—கிளம்புவார்!

[illegible], நவ. 19—

உலகிலேயே [illegible] யுத்த வீரர் என்று புகழ் பெற்ற [illegible] நேமா, மீண்டும் மல்யுத்தத்தில் [illegible] இறங்கப் போகிறார் என்று தெரிய வருகிறது. பணமுடைதான் இதற்குக் காரணம் என்று தெரிகிறது.

ஐ.சி.எஸ். வெங்கடராம ஐயர் மீது கிரிமினல் நடவடிக்கை

வழக்குத் தொடுக்க யோசித்து வருவதாக இந்திய சர்க்கார் தகவல்

புதுடில்லி, நவ 19—

இந்திய அரசாங்கத் தொழில் வர்த்தக இலாக்காவின் முன்னாள் காரியதரிசியும், பதவியில் இருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டவருமான எஸ். ஏ வெங்கடராமன், ஐ சி எஸ். மீது, சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசித்து வருவதாக, உதவி உள்நாட்டிலாக்கா உதவி மந்திரி பி. என். தாதர் கூறினர்.

நாகேஸ்வர் பிரசாத் சின் குற்றச்சேட்டாக்களை விசாரிக ஹா என்பவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், உதவி மந்திரி கூறியதாவது:—

வெங்கட்ராமன் மீதுள்ள சர்க்கார் ஊழியர்கள் விசாரணை சட்டப்படி நியமிக்கப்பட்ட கமிஷனர் வெங்கட்ராமன், தன் வீட்டுக் கட்டிட பிளான் தயாரித்தல், வீடு கட்டுதலை மேற்பார்த்தல், மேலும் விலையுயர்ந்த ஆடை ஆபரணங்கள், மேஜை, நாற்காலிகள், மூக்குக் கண்ணாடிகள் போன்றவற்றை, இலவசமாகப் பெற்றார் என்ற முடிவுக்கு வந்துள்ளார்.

இந்தப் பொருள்களும், இலவச வேலைகளும், தொழில், விநியோகம், தொழில் வர்த்தகம் ஆகிய இரு இலாக்காக்களையும் [illegible] பார்த்து வந்த வெங்கட்ராமனுக்கு, [illegible] ஏற்றுமதி, இறக்குமதி லைசென்சு பெறுவதில் ஈடுபட்டிருந்த சில, கம்பெனிகளால் தரப்பட்டன.

இந்தப் பரிசுகள் [illegible] லஞ்சமாக வாங்கப்பட்டவைதான் [illegible] விசாரணைக் கமிஷனர் முடிவு கூறியுள்ளார்.

உதவி மந்திரி, அந்த விசாரணை அறிக்கையை சபையின் முன் வைப்பது பற்றி யோசிப்பதாகக் கூறினர்.

விசாரணை கோர்ட், கமிஷனாலேயே, சரியானதல்ல என்று நிராகரிக்கப்பட்ட ஒன்றல்லாத மற்றெல்லாக் குற்றச்சாட்டுகளையும் விசாரணை செய்தது.

கழகத்தவர் மேல் போலீஸ் போட்ட வழக்கு தள்ளுபடி

நிரபராதிகள் என மாஜிஸ்திரேட் தீர்ப்பு

மதுரை, நவ. 13—

மதுரை, கீழமாசி வீதியிலுள்ள முத்து படிப்பகத் [illegible] தோழர்களான சண்முகசுந்தரம், கடற்கரை, தெய்வசிகாமணி ஆகி[illegible] மீதும், சுமார் ஆறு மாதங்களுக்கு முன் போலீசாரால் (ம[illegible] முதல் வகுப்பு பெஞ்சு கோர்ட்டில்) தொடரப்பட்டு, விசார[illegible] செய்து வந்த வழக்கில், நீதிபதி இன்று, தோழர்கள் மூவரும் [illegible] நிரபராதிகள் எனக்கூறி, வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

தோழர்களின் சார்பில் வழக்கறிஞர் சொக்கலிங்கம் பி.ஏ., பி.எல். அவர்கள், திறமையாக வாதாடினர்.

மதுரை கழகத் தோழர்கள் மீது போலீஸ் தொடுத்துள்ள ஜாமீன் வழக்கு

சர்க்கார் தரப்பில் 35 சாட்சிகள்

மதுரை, நவ. 18—

மதுரைத் தோழர்கள் 31-பேர் மீது தொடரப்பட்டிருந்த வழக்கில் இருவர் நமது தோழர்கள் அல்லவென ஏற்கனவே மதுரை நகர் முதல் வகுப்பு நீதிபதி பி தங்கமணி நாடார் அவர்களிடம் நம் தோழர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இன்று, 29 தோழர்கள் கோர்ட்டில் ஆஜராயினர். மேற்படி வழக்கில் 35 பேர் சர்க்கார் தரப்பு சாட்சிகளாக வருகின்றனர். சாட்சிகளின் பட்டியல் இன்று தரப்பட்டு விட்டது. வருகிற டிசம்பர் மாதம் 3-ந் தேதிக்கு வாய்தா போடப்பட்டு விட்டதோடு, அன்றையதினம் முதல் வழக்கு விசாரணை ஆரம்பமாகுமென நீதிபதி அறிவித்தார்.

தோழர்கள் சார்பில், வழக்கறிஞர் திரு. தர்மராஜ் சந்தோஷம் அவர்கள் ஆஜரானார்கள். [க. நி]

மதுரை கழகத் தோழர்கள் ஐவர் மீது புதிய வழக்கு

மதுரை, நவ. 18—

மதுரை, முனிச்சாலை ரோடிலுள்ள மஜீத் படிப்பகத் தோழர்களான எஸ். ரெத்தினம், தங்காசன் மாயக்கனி முகம்மது, செந்திக்குமார் ஆகிய ஐவர் மீதும், ஐ பி. ஸி. 147, 323 149 ஆகிய பிரிவுகளின்படி, மதுரை டவுன் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் போலீசார் வழக்கு தொடுத்துள்ளனர்.

தானிய இறக்குமதியில் ஓர் அதிசயம்!

பம்பாய், நவ. 20—

சென்ற மாதத்தில், பம்பாயின் ஓரே ஒரு கப்பல் தானியம் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டது. இந்திய சர்க்கார் உணவு இறக்குமதி கொள்கை நிர்ணயமாகும் வரையில், அங்கு உணவு தானியம் இறக்குமதி செய்யப்படமாட்டாது. உணவு நிலைமை அநேக மாகாணங்களில் மிகத் திருப்திகரமாக இருக்கிறதாம்!

எதிர்காலத்தில் நடைபெறும் காமன் வெல்த் மாநாடுகளும், லண்டனில்தான் நடைபெற வேண்டும் என்பதில்லை என்று பிரிட்டன் காமன்வெல்த் உறவு மந்திரி கூறியுள்ளார்.

இலண்டனில் இந்தியர்கள்!

லண்டன், நவ 19—

லண்டனில் 16,370 இந்தியர்கள் வசிக்கிறார்கள் என்பது, 1951 ஆண்டு ஜனக்கெடுப்பு புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வருகிறது.

அறப் போர் மாணவருக்கு ரூ. 100 அபராதம் அல்லது ஒரு மாதம் காவல் தண்டனை

அபராதம் கட்ட மறுத்து சிறை புகுந்தார்!

திருவனந்தபுரம், நவ. 18—

இங்கு, காந்தி கல்லூரியில் படிக்கும் மாணவர் ஒருவர், கல்லூரிமுன் நின்று மறியல் செய்ததற்காக கைது செய்யப்பட்டார். அவரை விசாரித்த மாஜிஸ்திரேட், ரூ. [illegible] அபராதமும், கட்டத் தவறினால் ஒரு மாதம் வெறுங் காவல் தண்டனையும் கொடுத்தார். மாணவர் அபராதம் கட்ட மறுத்துச் சிறை புகுந்தார்.

22-11-53 ஞாயிறு மாலை திருவாரூரில் கருணாநிதிக்கு வரவேற்பு

தோழர் ஏ. கோவிந்தசாமி. எம். எல். ஏ.. கலந்துகொள்வார்

ஐவர் சிறையில்!

இன்று

81-வது நாள்

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 20—11—1953 வெள்ளி

கண்ணியம் கரைகிறது!

மக்களின் உறவு முறையை ஒழுங்குபடுத்தி நலன்களைப் பாதுகாத்துப் பெருக்குவதற்குத்தான் ஒரு ஆட்சி நிறுவனம் இருக்க வேண்டுமேயல்லாது, ஒன்றிரண்டு தனி நபர்களின் ஆதிக்கப் பீடமாக அது இருக்கக்கூடாது. தனி நபர்களின் அறிவு நுட்பமும், ஆளும் திறனும் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தபோதிலும், அந்தத் தனி நபர்களையே நம்பித்தான் ஒரு நாட்டின் ஆட்சி நிறுவனம் நடந்தாக வேண்டும் என்ற நிலை இருக்குமானல் அந்த நாட்டில் உள்ள மக்கள் வெறும் மண்ணாங்கட்டிகள் என்றும், அந்த நாட்டுக்கு நல்லதோர் எதிர்காலம் இல்லை என்றுந்தான் அறிந்தவர் கூறுவர்.

மக்களின் சக்தி மகத்தானது; என்றும், இளமை வளம் குன்றாமல், வளர்ந்துகொண்டே இருப்பதாகும். அரசியல் அரிச்சுவடியும் கற்றறியாத, உலக வரலாற்று அறிவு ஒரு துளியும் இல்லாத உலக்கைக் கொழுந்துகளுக்குத்தான் தங்களுக்குப் பிடித்தமான இரண்டொரு 'ஆறுதல் அரசர்கள்' போய்விட்டால், உலகமே அழிந்துபோகும் என்ற அச்சம் தட்டும். இவர்கள், அரசியலிலே ஆஷாடபூதி ரகத்தைச் சேர்ந்தவர்கள், ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர் நின்றால் உண்பதில் தப்பித் தவறி சிந்திச் சிதறும் மிச்சம் மீதியை, அறுசுவை விருந்தெனக் கொண்டு, திருப்தி பெறும் அற்ப சந்தோஷிகள் இனத்தைச் சேர்ந்தது இந்தக் கூட்டம் நிற்க;

இத்தகு கட்டணம் இல்லாத பேய்க்கூத்து ஒன்று, சென்ற சில நாட்களாகச் சென்னை மாநிலத்தில் நடந்து கொண்டு இருக்கிறது. இந்தப் பேய்க்கூத்துக்கு கனம் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்தான் கதாநாயகர். மற்ற எடுபிடிகள் எல்லாம் 'வானர சேனை'கள். பேய்க்கூத்து நடக்கிறது மும்முரமாக. அமைச்சர் ஆச்சாரியார் வாக்கிலே கூறவேண்டுமானுல் 'தேவாசுரப் போராட்டம்' காங்கிரஸ் கட்சிக்குள்ளாகவே நடந்துகொண்டு இருக்கிறது என்று சொல்லவேண்டும். ஆச்சாரி[illegible] அவர்களின் அருமை பெருமைகளை சிவரும், [illegible] மலையும், மாந்தி மாந்தி மக்களிடம் சந்தைபூனை சி[illegible]கின்றன. புளுகு மணியும் வெகுஜன சத்துருவும், குட்டிக் கடவுள்களின், சாகசமுடையும் முடக்கல்களை [illegible] றும் மக்களுக்குப் படைத்தவண்ணம் உள்ளன. [illegible] தூற்றல், அதுவும் பொருத்தமற்ற வசை மாரி [illegible]தர்ப்பிற்கு ஆகத்தைதத ன் சொடுக்கும என்றுச் [illegible]தாரண அறிவுகூட இந்த இரு எழுத்துப் பறைகளுக்கும் இருப்பதாகச் சொல்வதற்கில்லை.

அமைச்சர் ஆச்சாரியாரை எதிர்த்து நிற்கும் காங்கிரஸ் எம். எல். ஏ.-க்களை, தங்கள் தங்கள் சட்டசபை உறுப்பினர் பதவிகளை ராஜினமா செய்துவிட்டு, மீண்டும் தேர்தலில் நின்று வெற்றி பெறட்டும் பார்ப்போம் என்று சவால் விடுகின்றன, அந்தக் கடுவன்கள். தேர்தல் என்றாலே குடல் நடுக்கம் கொள்ளும் அமைச்சர் ஆச்சாரியாருக்கு விடவேண்டிய சவாலை, ஏற்கனவே பொதுமக்கள் வாக்குகளைப் பெற்றுள்ளவர்களுக்கு விட்டால், பொதுமக்கள் கைகொட்டி நகைப்பரே என்ற சிறு புத்தியும்கூட அதுகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. தாய் வீட்டுப் பெருமையை அண்ணன் தம்பியிடம் கூறும் சிறுமியின் செயல் போலவே இருக்கிறது இந்த 'வானர சேனை'யினர் கூற்று.

அமைச்சர் ஆச்சாரியார், 1942-ல் காங்கிரசின் கண்ணியத்தைக் காப்பாற்றினரா அல்லது காங்கிரசைக் காட்டிக் கொடுக்கும் படைக்குத் தளகர்த்தராக இருந்தாரா என்பதை இந்த வானர சேனைகள் கருதிப் பார்த்ததாகவே காணோம். அப்போது, தன்னைக் காட்டிலும் ஒரு ஸ்தாபனம் மிக மிக மட்டமானது என்று எண்ணி, ஸ்தாபனத்துக்கு இழுக்குத் தேடியவர், இப்பொழுது மட்டும் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் ஆக்கத்துக்கும் கண்ணியக் காப்புக்கும் பாடுபடுகிறார் அல்லது பாடுபடுவார் என்று சொல்லவோ நம்பவோ எப்படி முடியும் என்பதை நம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

அமைச்சர் ஆச்சாரியாரும், 'நான் விலகிவிட்டால் நாடு சீர் குலைந்து விடுமே—கெட்டுப் போகுமே' என்று அடிக்கடி அங்கலாய்த்து வருகிறார். ஆச்சாரியார் ஏனோ, தன்னை ஒரு கோபுரம் தாங்கி பொம்மைபோல் நினைத்துக்கொண்டு பேசித் திரிகிறார்!

காட்டாற்றிலே நல்ல வெள்ளம். வெள்ளத்தில் சிக்கிய நரி, வெள்ளத்தோடு அடித்துக்கொண்டு போகப்பட்டது. இடையில் கரை ஓரத்தில் நின்றிருந்த மக்களைக் கண்ட நரி, 'உலகம் போச்சே' 'உலகம் போச்சே' என்று கூக்குரல் கிளப்பிற்று. உலகத்துக்குத்தான் ஏதோ ஆபத்து வந்து விட்டது என்று பீதிகொண்ட மக்கள், மிகக் கஷ்டப்பட்டு வெள்ளத்தோடு சென்ற நரியைக் காப்பாற்றி, கரை சேர்த்தார்கள். 'உலகம் போச்சே' என்று கூவினயே, 'உலகத்துக்கு என்ன ஆபத்து?' என்று மக்கள் நரியைக் கேட்டார்கள். நரி சொல்லிற்று, "நான் வெள்ளத்தினுல் அடித்துக் கொண்டு போகப்பட்டால் எனக்கு உலகம் இல்லாமல் போகிறது! அதற்குத்தான் 'எனக்கு' 'உலகம் போச்சே' என்று கத்தினேன். நான் கூறிய 'எனக்கு' என்ற சொல் உங்கள் காதில் விழவில்லை போலும்!" என்று. நரி பதில் சொல்லிவிட்டு ஓட்டமாக ஓடிவிட்டதாம்.

வெறும் கதைதான். அமைச்சர் ஆச்சாரியாரின் சொல்லையும், செயலையும் அப்படியே பிரதிபலித்துக் காட்டுகிறது, இந்த நரிக் கதை.

'எனக்கு' என்று அவர் முணுமுணுப்பது, பொதுமக்கள் காதுகளில் விழவில்லை என்று, அவர் கற்பனை செய்து கொள்ளுகிறரேயல்லாமல், நாட்டு மக்கள் அவர் கூற்றின் உட்பொருளை நன்றாகத்தான் உணர்ந்திருக்கிறார்கள். அவருக்குள்ள அதிகார போதை, தான் என்ற அகந்தை—அவரை இப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது. தலைவர் பி. டி. ராஜன் அவர்கள் கூறியதுபோல, 'சொல்லத்தகாததைச் சொல்லுகிறார்—செய்யத்தகாததைச் செய்கிறார்—என்ன வேண்டுமானாலும் செய்வார்!'

அமைச்சர் ஆச்சாரியாருடைய திருவிளையாடலால், இந்தத் திராவிட நாட்டின் எதிர்கால அரசியல், புனிதம் பெற பல நாள் பிடிக்குமே என்ற பெருங் கவலையால்தான், இவ்வளவும் எழுதுகிறோமேயல்லாமல், வளைந்த வாலை நிமிர்த்தி விடுவோம் என்ற நம்பிக்கையால் அல்லவே அல்ல. அந்தப் பணி நமக்குத் தொடர்புடையதும் அல்ல; அதில் நமக்கு அக்கறையும் கிடையாது.

அமைச்சர் ஆச்சாரியாரும், அவரது வானர சேனை கனபதிகளும், அப்படிக் குறிப்பிடத் தகுந்த அளவில் ஏதாவது தொக்கி இருந்தால்—காங்கிரஸ் கண்ணியத்தையும், சொந்த கண்ணியத்தையும், தங்கள் ஆணவத்தாலும், அதிகார மோகத்தாலும், பலி கொடுத்து வருகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டியதாக இருக்கிறது.

நமக்கு எதற்குக் கவலை, பெரிய இடத்து விவகாரத்தில்? ஆசியாவின் சுடர் விளக்கே, இந்த இருள் நீக்க முடியாமல் இருண்டு இருண்டு ஒளி வீசும்பொழுது, நம் போன்ற சாமானியர்களால் என்ன முடியும்? பொது மக்கள்தான் அவருடைய அதிகார போதையைத் தெளிவிக்க முன்வர வேண்டும்!

தூத்துக்குடி வழக்கு நிதி

★

பொறுப்பாளர் வேண்டுகோள்

சென்னை அரசியலாரால், நமது தோழர்கள்மீது தொடுக்கப்பட்ட தூத்துக்குடி சதி வழக்கை விசாரிக்கத் தனி நீதி மன்றமும் உருவாகிவிட்டது. அதற்கென நீதிபதி ஒருவரையும் ஆச்சாரியார் நியமித்துவிட்டார். ஆரம்பச் சடங்கு முடிந்துவிட்டது. இனி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுவதுதான் மிச்சம். இத்துறையில் அதிக நாள் செல்லாது.

நமக்கென வாதிட ஒப்புதல் தந்துள்ள வழக்கறிஞர்கள் செயலாற்றத் தொடங்கிவிட்டார்கள். வழக்கறிஞர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தில் (பீஸ்) ஒரு பகுதியே கொடுக்கப்பட்டுள்ளது; பெருந்தொகை கூடிய சீக்கிரம் கொடுக்கப்பட வேண்டும்.

வழக்கின் வெற்றியும் [illegible]ல்வியும், கிளைக்கழகத் தோழர்கள் காட்டும் ஆதரவிலும் [illegible] [தூ]த்துக்குடி சதி வழக்கு நிதியை நிரம்பும் விதத்திலுந்தான் இருக்கிறது.

பொதுச் செயலாளர் அ[ண்ண]ா அவர்கள் சிறையிலிருந்து வருவதற்குள், தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்கென நம்மிடம் ஒரு பெருந் தொகை சே[ர வே]ண்டும். அவருக்கு நாம் காட்டும் மரியாதை அதுவாகத்தான் இருக்க முடியுமேயல்லாது, வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

ஆகவே, தூத்துக்குடி சதி வழக்கிற்கென நிதி சேர்த்து வைத்துள்ள கிளைக்கழகங்களும் தனிப்பட்டவர்களும் அன்புகூர்ந்து அந்நிதிப் பணத்தை உடனடியாக அனுப்பி உதவ வேண்டுகிறேன். அவசரம்; மிகமிக அவசரம்.

[illegible] கோவிந்தசாமி, எம். எல். ஏ.,

பொறுப்பாளர், தி. மு. கழக தலைமை நிலையம்.

கீழ்க்கண்ட முகவரிக்கு நிதி அனுப்புக!—

அ[illegible] [கண்]ணம்பலஞர், "அறிவகம்," இராயபுரம், சென்னை-13

செ[ன்]னை மாநில கல்வி நிலை

1950—51:

1950—51-ல் கலைக் கல்லூரியில் மாணவர்கள் — ஆண்: 49 3-3; பெண்: 4 551.

தொழிற் கல்லூரிகளில் மாணவர்கள்—ஆண்: 6 631; பெண்கள்: 906

இடைநிலைப் பள்ளிகளில் ஆண்கள்: 5 34 122; பெண்கள்: 1 25 528.

ஆரம்பப் பள்ளிகள்: 38,443; ஆதாரக் கல்விப் பள்ளிகள்: 402; ஆதாரக் கல்வி பயிற்சிப் பள்ளிகள்: 48

இடைநிலைப் பள்ளிகள்: 1 399.

கலைக் கல்லூரிகள், மொத்தம்: 55.

தொழிற் கல்லூரிகள்: 26.

பெண்களுக்கென 11 கலைக் கல்லூரிகளும், 5 தொழிற் கல்லூரிகளும் இருக்கின்றன.

முதியோர் கல்விக்கான பாடசாலைகள்: 1 157; இவற்றில் படிப்பவர்கள் 31 126 பேர்கள்.

கிராமக் கல்லூரிகள்: 10. இதில் படிப்பவர்கள், 31,126 பேர்கள்.

பொது நூல் நிலையங்களும், படிப்பகங்களும் 2 5 ! 5.

★★★★★★★★★★★★

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

★

இதுவரை சேர்ந்துள்ளது

ரூ. 3436-2-2

★★★★★★★★★★★★

மணமேட்டில் காலரா

அதிகாரிகள் கவனக் குறைவு

திருச்சி, நவ. 18—

திருச்சி முசிறி வட்டத்தைச் சேர்ந்த மணமேட்டில் காலரா நோய் கண்டு தயாளன் என்ற சிறுவன் 15-ம் தேதி இறந்துவிட்டான். மேலும் பலர் காலராவினால் பாதிக்கப்பட்டு இருக்கின்றனர். இது விஷயமாக மணமேடு தி. மு. கழகத் தோழர்கள் வாரண்டமைக் கழகத் தலைவரிடமும், கிராம முன்சீப் இடமும், முசிறி வட்ட சுகாதார அதிகாரியிடமும் நேரில் சொல்லியும், ரிபோர்ட் கொடுத்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையெனத் தெரிகிறது.

—ஓ. சி.

சென்னை அசெம்ளி, மேல் சபை கூடுகிறது

சென்னை, நவ. 19—

டிசம்பர் 14-ம் தேதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு, மவுண்ட் ரோடு சர்க்கார் மாளிகை எஸ்டேட்டிலுள்ள புதிய அசெம்பிளி கட்டிடத்தில் சென்னை அசெம்பிளி கூடுமாறு கவர்னர் அழைத்துள்ளார்.

டிச 28-ம் தேதி திங்கள் காலை 11-மணிக்கு, கோட்டை கவுன்சில் கட்டடத்தில் மேல் சபை கூடுமாறும் அவர் அழைத்துள்ளார்.

வேலை தேடித்தரும் நிலையங்கள்

மக்கள் சபையில் விவாதம்

புதுடெல்லி, நவ 18—

வேலை தேடித் தரும் நிலையங்கள் மாநில அரசுகளின் அதிகாரத்தில் உள்ளவையா அல்லது மத்திய அரசின் அதிகாரத்தில் உள்ளவையா என்பதுபற்றி, மக்கள் சபையில் இரு அமைச்சர்களிடையே பெரும் விவாதம் நடைபெற்றது.

அவை, மாநில அரசின் அதிகாரத்தில் உள்ளவை என தொழிலாளர் இலாகா அமைச்சர் ஜாபர் அலி கூறியதை சபைத் தலைவர் ஏற்றுக்கொண்டார்.

மத்திய சர்க்காருக்கே அதிகாரம் என பாதுகாப்பு ஸ்தாபன அமைச்சர் தியாகி விவாதித்தார்.

இந்நிலையில் பண்டித நேரு தலையிட்டு "மத்திய சர்க்காருக்கு சொந்தமுள்ள, ஆனால் மாநில சர்க்காரின் பொறுப்பிலே உள்ள விஷயம் இது," என்றார்.

எப்படி இருந்தாலும், இது அவசரமான, முக்கியத்வமும் வாய்ந்த விஷயமல்லவென சபைத் தலைவர் கூறினார்.

பஞ்சாப் சர்க்கார், அதன் பகுதிக்குள் உள்ள வேலை தேடித் தரும் அலுவலகங்களை மூடவிரும்பியதை யொட்டி எழுந்த விவாதமே இது.

கல்வி விசாரணை கமிட்டி ரிபோர்ட்

சென்னை, நவ. 19—

கல்வி விசாரணைக் கமிட்டியின் ரிப்போர்ட் இன்னும் ஓரிரண்டு நாட்களில் சமர்ப்பிக்கப்படுமென்று கமிட்டி செயலாளர் சர்க்காருக்கு எழுதியிருப்பதாக நிதி அமைச்சர் இன்று கூறினார். ரிப்போர்ட்டின் நகல் ஆந்திர சர்க்காருக்கும் அனுப்பப்படும்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

முன் தொடர்ச்சி ரூ	3298—7—5
துறையூர் மோட்டார் தொழிலாளி எம். ராசகோபால் மூலம் வசூல் :—	
எம். ஜி இப்ராகிம்	1—0—0
கருப்பண்ணன்	1—0—0
ப. வெங்கடாசலம்	1—0—0
வடிவேல்	1—0—0
முத்துவீரன்	1—0—0
ஆர். ராசகோபால்	1—0—0
ஆர். கே. பெருமாள்	1—0—0
பி கிருஷ்ணசாமி, கோவிந்தன்	1—8—0
பாஜிபாய்	1—0—0
கருப்பண்ணன்	1—0—0
க. சின்னதம்பு	1—0—0
எம் கணபதி	1—0—0
பி. ராயப்பன்	1—0—0
கை. ஆறுமுகம்	5—0—0
பி. ரங்கசாமி	1—0—0
ஆர் மன்னார்	1—0—0
குப்புசாமி நாயுடு	1—0—0
நடராசன்	1—0—0
கே. சுப்பையா	1—0—0
பி. கிருஷ்ணன்	1—0—0
டி எஸ் வி. ராகவன்	1—0—0
வி. ராஜி	1—0—0
என். அரிகரன்	1—0—0
அனுதாபி ஒருவர்	1—0—0
அனுதாபி ஒருவர்	1—0—0
மணப்பாறை தோழர்	5—0—0
கிருஷ்ணப்பா	1—0—0
டி. ஆர். வெங்கடசாமி	1—0—0
காதர் சாயிபு	1—0—0
கே. ஆர். ஏகாம்பரம்	1—0—0
என் குட்டி	1—0—0
கே. எஸ். ஆறுமுகம்	1—0—0
டி. எஸ் முத்துசாமி	1—0—0
டி என். குப்புசாமி	1—0—0
டி. ஆர். வீரண்ணன்	1—0—0
பி. எஸ். அமிர்தம்	2—0—0
எம். பி. பண்டரிநாதன்	2—0—0
டி. என மாணிக்கம்	1—0—0
எம் ஆண்டியப்ப முதலியார்	1—0—0
து. ப. அ. மாமுத்து	4—0—0
கோ. ராமசாமி	1—0—0
ராஜி செட்டியார்	1—0—0
டி. ஜி ரங்கராஜ்	1—0—9
க. பொன்னுசாமி	1—0—0
அ மா. பெரியசாமி	1—0—0
என். கே. கிருஷ்ணசாமி	3—0—0
கந்தசாமி	1—0—0
ரா அய்யாவு	1—0—0
வி. எம் பிச்சமுத்து பிள்ளை	1—0—0
எம் சுந்தரம் பிள்ளை	2—0—0
டி பி சி பாலுசாமி	2—0—0
என் ஜி. ரங்கசாமி செட்டியார்	2—0—0
ஆர். பொன்னுசாமி	1—0—0
ஏ ஆர். ராமராஜ்	2—0—0
எஸ். பெரியதம்பி	5—0—0
வி. ஆர் ஆதிமூலம்	10—0—0
எம் ராசகோபால்	1—0—0
தோழியர் அருண்மொழி [illegible] துறையூர் தி. மு. கழகப் [illegible] கூட்ட உண்டி வசூல்	20—2—9
உடுமலைப்பேட்டை, தி. [illegible] கழகப் பொதுக்கூட்ட உண்டி வசூல்	28—0—0
ஆகமொத்தம் ரூ	3436—2—2

இந்திய கலாசாரம் என்பது வெறும் கலப்படமே!

பிறர் நல்லியலையும், பரந்த நோக்கத்தையும் பிரதிபலிப்பதே உண்மை கலாசாரம்

"இந்தியக் கலாசாரம் என்பது, பல கலாச்சாரங்களை சாமர்த்தியமாக ஒன்று சேர்த்துப் பின்னி உருவாக்கப்பட்டதாகும். மனம், உடல், உள்ளம், மூன்றையும் மனித வர்க்கத்திற்கு இன்றியமையாத பல வேலைகளுக்கு தயார் செய்யும் கலைதான், கலாச்சாரம்."

"பல நாடுகள், பல மதங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து இந்திய கலாச்சாரம் உருவாகி இருக்கிறது."

—இவ்வாறு கிண்டி இஞ்சினீயரிங் கல்லூரி கலாச்சார வார நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் சி. பி. ராமசாமி அய்யர் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"உண்மையான கலாச்சாரம் என்பது பரந்த நோக்கத்தையும், மற்றவைகளில் உள்ள நல்ல அம்சங்களைப் பின் பற்றுவதையும் பொறுத்திருக்கிறது."

"எதைப் பற்றியும் நாமே சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதையும் சிந்தித்துப் பார்க்காமல் ஒப்புக்கொண்டு விடாதே" என்று புத்தர், தன் சீடர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறார்.

"புத்திசாலித்தனம் என்பது எங்கிருந்தோ முளைக்கவில்லை. நாமே வைத்தி ஆராய்ந்து பார்த்தால் தான் அறிவு ஏற்படும் என சங்கராச்சாரியாரும் கூறியுள்ளார்."

"கிந்தனார்"

இலவச நூல் நிலைய நிதிக்காக, வில்லிவாக்கத்தில் 22-11-53 ஞாயிறு மாலை 6 மணிக்கு தர்கா தெலுங்கு பள்ளியில், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினரால் 'கிந்தனார்' கலா நிகழ்ச்சி நடைபெறும்.

17-வது வட்ட தி.மு.கழக செயற்குழு தோழர்கட்கு

சென்னை, நவ. 20—

22—11—53 ஞாயிறு காலை 9-மணிக்கு, சென்னை, 17-வது தி மு கழக செயற்குழு கூட்டம், கழக அலுவலகத்தில் நடைபெறும். தோழர்கள் அனைவரும் இதையே அழைப்பாக ஏற்று கலந்துகொள்ளுமாறு செயலாளர் சு. பாலன் கேட்டுக்கொள்ளுகிறார்.

★

சென்னை 26-வது வட்ட பொது உறுப்பினர் கூட்டம்

"22-11-53 மாலை 6 மணிக்கு பெரியமெட், 1/c. வாத்தியார் கந்தப்பப் பிள்ளை வீதியில் தூத்துக்குடி வாரம் நடத்தப்படும். [illegible] பொது உறுப்பினர்களும் இதையே அழைப்பாக ஏற்று [illegible] பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்." என்று, [illegible] அ. குப்புசாமி அறிவித்துக் கொள்ளுகிறார்.

★

"கடும் நடவடிக்கை எடுப்போம்!"

தியாகியின் எச்சரிக்கை

புதுடில்லி, நவ 17—

கூடிய விரைவில் திருவாங்கூர்-கொச்சியில் அவர்கள் இருக்கும் தேர்தல் பிரசாரத்திற்கு ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு, தனவாடச்சாலை சிப்பந்திகள் சிலர் ஓய்வு எடுத்துக் கொண்டு அங்கு சென்றிருப்பதாகத் தமக்கு தகவல் கிடைத்திருப்பதாயும், அது பற்றி தான் தொடர்ந்து விசாரித்ததாகவும் மக்கள் சபையில் மந்திரி மஹாவீர தியாகி அறிவித்தார்.

மேலும் கூறுகையில், சர்க்கார் சிப்பந்திகள் ஆட்சியிலுள்ள கட்சிக்கு ஆதரவாக பிரசாரம் செய்தால் கூட, அவர்களை அரசாங்கம் சும்மா விடாது; ஆனால், சர்க்கார் சிப்பந்திகள் எந்த கட்சிக்கு வேண்டுமானாலும் ஓட்டளிக்கலாம்; ஆனால், தேர்தல் பிரசாரத்தில் பங்கெடுத்தால் கடும் தண்டனைக்காளாவர் என அவர் கூறினார்.

பாதிக்கப்பட்டு விட்டதாம்!

கல்கத்தா, நவ. 20—

மில் வேஷ்டி உற்பத்தியைக் கட்டுப்படுத்தி இந்திய சர்க்கார் அவசரச் சட்டம் பிறப்பித்ததினால் மேற்கு வங்கத்திலுள்ள மில்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக இந்திய சர்க்கார் கைத்தொழில் மந்திரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. நிலைமையை நேரில் ஆராய, வர்த்தக, கைத்தொழில் மந்திரி இன்று கல்கத்தா செல்கிறார்.

கோதாவரி வெள்ள நிதி

சென்னை, நவ 19—

கோதாவரி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சென்னை, ஆந்திர மகாஜன சாரணர்கள் 15,000 துணிமணிகள் சேகரித்து அனுப்பியிருக்கின்றனர். வட மலபார் — சிறக்கல் ஸ்தல சாரணர் சங்கம் ஜில்லா கலெக்டர் மூலமாக 850 துணிமணிகள் சேகரித்து அனுப்பியுள்ளது.

பண்டிதர் பரம்பரையினர் நாகரீகச் செயல்!

வண்டித் தொடரிலிருந்து நீராவி இயந்திரத்தை துண்டித்து ஓட்டினர்

கான்பூர், நவ 18—

கூட்ஸ் ரயில் ஷண்டிங்கின் போது விஷமக்கார மாணவர்கள் சிலர் ரயிலைச் சூழ்ந்து கொண்டு, ரயிலிலிருந்து எஞ்சினைக் கழற்றிக் கொஞ்ச தூரம் ஓட்டியதாகத் தெரியவருகிறது.

பூட்டப்பட்டிருந்த சில வாகன்களின் சீல்கள் உடைக்கப்பட்டிருந்தனவாம்.

எஞ்சின் டிரைவர் தேனீர் அருந்த சென்றிருந்த நேரத்தில் பக்கத்திலிருந்த கல்லூரியின் இண்டர் மீடியேட் மாணவர்கள் இந்த வேலையைச் செய்திருக்கின்றார்கள்.

காங்கிரசை எதிர்த்த காங்கிரஸ் ஊழியர்கள்

இலட்சுமணபுரி, நவ 18—

அண்மையில் முனிசிபல் தேர்தல்களில் உத்தியோகப் பூர்வமான காங்கிரஸ் ஊழியர்கள் மீது, உ. பி காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிகிறது. உத்தியோகப் பூர்வமான அபேட்சகர்களை எதிர்த்தவர்கள் உடனடியாக காங்கிரசிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். மேலும் நான்கு ஆண்டுகட்கு அவர்கள் காங்கிரசில் திரும்பச் சேரக் கூடாதென்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது. எதிராக வேலை செய்ததாக புகார் கூறப்பட்டவர்கள், சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ளார்கள்.

மறுமலர்ச்சிக் கழகம்

மதுரை, நவ 18—

கழகச் செயற் குழுக் கூட்டம் 4—11—53ல், தோழர் மது. இ பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் பி. இராமானுசம் விலகல் கடிதம் ஏற்கப்பட்டு தோழர் அ இராசா புதிய செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், தூத்துக்குடி பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

—ஆ. கி.

இனிமேல் செய்யமாட்டார்களாம்!

சென்னை, [illegible]—

செங்கல்பட்டு ஜில்லா [illegible] வள்ளூர் தாலுகாவைச் [illegible] காலனி-புதூரில் கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுபவர்கள், மதுவிலக்கு அதிகாரிகளிடம் நேரில் வந்து, தாங்கள், இனிமது காய்ச்சுவதில்லை என்றும், ஆனால் வேறு வேலை தரவேண்டுமென்று கூறியதாகவும் தனக்குத் தகவல் கிடைத்துள்ளதென்று மதுவிலக்கு மந்திரி ஜோதி வெங்கடாசலம் தெரிவித்தார்.

திராவிட நாடு......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று டெல்லிக்கு அடிமைப்பட்டு வாழுகிறது. அது, டெல்லியின் தொடர்பை அறுத்துக் கொள்ள அதிகாரம் பெறாதது. புதிய மந்திரிசபை அமைத்திருக்கும் பிரகாசம்காருவுக்குக் கிடைக்கும் மொத்த வருமானம் 12 கோடி ரூபாய் தான்; ஆனால், ஆந்திரத்திலிருந்து புகையிலை வரி மட்டும் டெல்லி அரசாங்கத்திற்கு 7 கோடி ரூபாய் செல்கிறது. பிரகாசம் காருவுக்குக் கிடைக்கும் இந்த 12 கோடி ரூபாயை வைத்து எப்படி ஆட்சி நடத்த முடியும்?

அவரும் ஒரு நாள் சிந்தித்துதான் தீருவார். உடனே அவர் சிந்தனையில் தட்டுப்படுவது, டில்லிக்குக் கொடுக்கும் ரூ. 7 கோடி! உடனே நேருவின் சமுகத்தில் கையைப் போட்டு, 'நான் சென்னை நேருஜீ! எங்கே, என் நாட்டு வரிப்பணத்தை எடுத்துக் கொண்டு செல்கிறீர்? உடனே கீழே வையும்?' —என்று கேட்கத்தான் போகிறார். நாமும் அதைத்தான் எதிர்பார்க்கிறோம்.

காரியக் கமிட்டியில்........

'ஆச்சாரியார் அடம்' விவாதிக்கப்படும்

புதுடெல்லி, நவ. 18—

அடுத்த மாதம், முதல் வாரத்தில் அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடும் அதுபோது, சென்னை, ஆந்திர, திருவாங்கூர் — கொச்சி ஆகிய மாநிலங்களின் காங்கிரஸ் விவகாரங்கள் ஆலோசிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டது.

அதே நாட்களில் காங்கிரஸ் மத்திய பார்லிமெண்டரி போர்டின் கூட்டமும் நடைபெறும்:

சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வாரென கூறப்படுகிறது.

இந்தியாவுக்கு டெலிவிஷன்!

கல்கத்தா, நவ. 20—

இந்தியாவுக்கு அடுத்த ஆண்டில், டெலிவிஷன் வரலாம். பம்பாயில் முதன் முதலாக ஆரம்பிக்கத்தக்க சூழ்நிலைகளிருக்கின்றன என்றும், 50 மைல் சுற்றளவுக்குள் 1,500 செட்டுகளுக்கு டெலிவிஷன் அனுப்ப முடியுமாம்!

போலீஸ் குழு தாக்கப்பட்டது

சப்-இன்ஸ்பெக்டரின் நிலை மோசம்

ஏலூரு, நவ. 19—

ஏலூரிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள செருவாலி கிராமத்தில், நேற்றிரவு 8-மணிக்கு தாலுகா சப்-இன்ஸ்பெக்டர் பிரபாதன ராவும், சில போலீஸ் கான்ஸ்டேபிள்களும் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

கிசான் தகராறு காரணமாக அவர்கள் அங்குச் சென்றிருந்தார்களாம்.

சப்-இன்ஸ்பெக்டருக்குப் பலத்த காயமென்று தெரிய வருகிறது. அவருடைய நிலை கவலைக்கிடமென்றும் கூறப்படுகிறது. மாவட்ட போலீஸ் அதிகாரிகள் ஸ்தலம் நோக்கிப் போயுள்ளனர்.

18-வது வட்ட தி.மு.கழக தோழர்கட்கு

சென்னை, நவ. 20—

"22—11—53 ஞாயிறு காலை 9 மணி அளவில், கழகக் கட்டிடத்தில் செயலாளர் தேர்தல் நடைபெற இருப்பதால் இதையே அழைப்பாகக் கொண்டு தோழர்கள் அனைவரும் தவறாது வருகைதர வேண்டப்படுகிறார்கள்" என்று அவைச் செயலாளர் சா. கோ. நாராயணசாமி கேட்டுக் கொள்கிறார்.

★

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.கழகத் தோழர்கட்கு

"16—11—53-ல் தேதியிலிருந்து எனக்கு உடல்நிலை சரியில்லாததால், முன்பு அறிவித்திருந்தபடி, தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூலிக்க வர இயலவில்லை. ஆகவே 23-11-53 திங்கட்கிழமை முதல் எல்லா கிளைக் கழகங்கட்கும் வருவதாக இருக்கிறேன். அதற்குள் கிளைக் கழகத் தோழர்கள் அனைவரும் பெருமுயற்சியுடன் நிதி வசூலித்து வைத்திருக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்," என, செங்கற்பட்டு மாவட்ட தி. மு கழகச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை அறிவிக்கிறார்.

‘திராவிட நாடு பெறுவதே நமது இறுதி இலட்சியம்’

மத்திய சர்க்கார் செலவில் விரிந்துள்ள வடக்கும், குறுகியுள்ள தெற்கும்!

ஆந்திரர், கன்னடர், கேரளர்—ஆதரிக்கவில்லை—கருதவில்லை—கேட்கவில்லை என்று பிதற்றும் அறிவிலிகளுக்கு தோழர் என். எஸ். இளங்கோ பதில்

பம்பாய் தி. மு. கழக 4-வது ஆண்டு விழா, 8—11—53 ஞாயிறு மாலை 7-30 மணிக்கு தாராவி வழைக்கட் வாடி திடலில் நடைபெற்றது.

மாலை 6-45 மணிக்கு சயான் புகைவண்டி நிலையத்திலிருந்து தோழர் எம். மாரியப்பா தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு தாராவியின் முக்கிய வீதிகளின் வழியாக வந்து, சுமார் 7-15 மணிக்கு ஆண்டு விழா பந்தலை வந்தடைந்தது. ஊர்வலத்தில் ‘திராவிட நாடு திராவிடருக்கே,’ ‘அண்ணா வாழ்க,’ ‘தலைவர்களை விடுதலை செய்.’ ‘டால்மியாபுரத்தைக் கல்லக்குடி சதிவழக்கை திரும்பப் பெறு.’ என்ற முழக்கம் விண்ணைப் பிளந்தது. தாராவியில், இதுவரையிலும் நடைபெறாத அளவுக்கு மிகச் சிறப்பான முறையில் ஊர்வலம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. எந்த வடநாட்டு ஏகாதிபத்தியத்தை வெளியேற்ற வேண்டுமென்று திராவிடத்தில் முழக்கமிடுகிறோமோ, அதே வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் இருப்பிடத்தில் நமது தோழர்கள் எழுப்பிய முழக்கம், வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு அடிக்கும் சாவுமணியாகத் தென்பட்டது.

வாழைக்கட்டவாடி திடலே கொள்ளாத அளவுக்கு பெருவாரியான மக்கள் கூடியிருந்த கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

துணைச் செயலாளர் த. மு. பொற்கோ அவர்கள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். தோழர் எம். என். கணபதி கூட்டத்திற்கு வந்திருந்தோரை வரவேற்றார். வரவேற்புரை நிகழ்த்தி தோழர் மா. இரா. குமாரசாமி அவர்களைத் தலைமை வகிக்கும்படி முன்மொழிய, தோழர் மா. இரா. [illegible]தாசன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தி. மு. கழகம், கடந்த 4 ஆண்டில் ஆற்றிய பணியை விளக்கி துணைச் செயலாளர் ஆண்டு அறிக்கை வாசித்தார். வரவு—செலவு கணக்கும் படித்துக் காண்பிக்கப்பட்டது.

பலத்த கைதட்டலுக்கிடையே தோழர் என். எஸ். இளங்கோ அவர்களுக்கு, பல தி. மு. கழகக் கிளைகளின் சார்பாக மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

தோழர் கண்ணதாசன் அவர்களால் கொடியேற்றி வைக்கப்பட்டது பிறகு, நீண்ட கைதட்டலுக்கிடையே தோழர் என். எஸ். இளங்கோ, சுமார் 3 மணி நேரம் காங்கிரசின் ஐந்தாண்டுத் திட்டத்தை விளக்கிப் பேசினார். அதன் சுருக்கம்:—

“சிறிது நேரத்திற்கு முன் நடைபெற்ற ஊர்வலத்தைக் கண்டேன்; பெருமையும் பூரிப்பும் அடைந்தேன்.

“இந்த ஊர்வலம், சென்னையிலோ, திருச்சியிலோ, விருதுநகரிலோ, தூத்துக்குடியிலோ நடைபெற்றிருந்தால் ஆச்சரியப்பட்டிருக்க [illegible] நாட்டு ஏகாதிபத்தியத்தை ‘வெளியேறு,’ என்று திராவிட நாட்டில் அறைகூவுகிறோமோ, அதே வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் மிகச் சிறந்த பட்டணமாகிய பம்[illegible]

குரல் சாதாரணமானதல்ல; திராவிடத்தில் எழுப்பும் குரலைவிட ஆயிரம் மடங்கு பலம் பொருந்தியது.”

தாதர் புகைவண்டி நிலையத்தில் எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைக் கண்டு நான் சந்தேகப்பட்டேன். மார்வாரியும், குஜராத்தியும், பனியாவும் குழுமியிருக்கும் இந்த பம்பாயில் நமது முழக்கம் இந்த அளவில் உயர்ந்திருக்கிறதா? என்று எண்ணும் பொழுது, இந்த அளவுக்குக் காரியமாற்றும் செயல் வீரர்களை வைத்து எந்தக் காரியத்தையும் சாதிக்கலாம் என்று எண்ணி நம்பிக்கை கொண்டேன். அதே நான் இரவில் ஆமதாபாத் செல்ல வேண்டியிருந்தது; சென்றேன்; ஆமதாபாத் புகைவண்டி நிலையத்தில் எனக்களிக்கப்பட்ட [illegible] வேற்பைக் கண்டேன், நமது தோழர்கள் முழக்கிய முழக்கத்தைக் கண்டேன் திகிலடைந்தேன். ஏன்?

“எந்த குஜராத்தியை, திராவிட நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று திராவிடத்தில் முழக்கமிட்டுக் கொண்டிருக்கிறோமோ, அதே குஜராத்தியின் கேந்திரத்தில் திராவிட நாட்டுக் குரல் முழங்கப்படுகிறது என்று எண்ணும்பொழுது ஒரு பக்கம் பூரிப்படைந்தேன்; மறுபக்கம், எங்கு நம்மைப் பேச விடாமல் தகராறு செய்து விடுவார்களோ என சந்தேகித்தேன்.”

ஆனால், கலகமிட்டு பம்பாய் தாராவியில் அதே ஒலியையும் முழக்கத்தையும் கேட்கும் பொழுது எனது பயம் நீங்கிவிட்டது — காரணம் உங்களுடைய உற்சாகமும், நாட்டுப் பிரிவினையில் உங்களுக்குள்ள ஆர்வத்தையும் தெரிந்து கொண்டதால்.

“தி. மு. கழகப் பாதை கரடு முரடானது; முட்கள் நிறைந்தது; நாம் செல்லும் பாதையில் கோர நாகம் படம் எடுத்துச் சீறும்; ஆட்சியாளர் அடக்குமுறையை வீசுவார்கள்; வைதீகம் வாட்டிக் கூச்சலிடும்; சாதி முறை சல்லடம் கட்டும்—இவைகளையெல்லாம் தாங்கிக்கொள்ளும் திட மனது வேண்டும்.”

“இப்பொழுது, இங்கு உங்களுக்கு இருக்கும் எதிர்ப்பு அற்பமானது; சொற்பமானது. இதைவிடப் பயங்கரமான எதிர்ப்புகள் உங்களை நோக்கி வரும். இந்நாட்டுப் பண முதலைகளின் பணம் உங்களை நோக்கி விரைந்து வரும். அவர்களுடைய பணம் உங்களைப் பிரித்துவிடப் பயன்படும்; [illegible] திராவிட நாட்டை எப்படிப் பெறுவோம் என்ற குறிக்கோளில் இருக்க வேண்டுமே தவிர, எதிர்ப்புகளைக் கண்டு [illegible] விடக்கூடாது.”

[illegible]

தது வரவு—செலவு கணக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. ஒரு ஆண்டில் மொத்த வரவு ரூ 1,500; செலவு ரூ 1,300; இருப்பு ரூ 200—என்று [illegible] விடத்திலுள்ள [illegible] [illegible], பெருவில்லாப் [illegible] ளர்கள்; ஆனால், பம்பாய் தி. மு. கழகப் பொருளாளர், பெருமையுடைய பொருளாளர். ஒரு ஆண்டில், ரூ [illegible]00 வரை செய்யக்கூடிய சக்தி பாய் தி. மு. கழகம் பம்பாயில் [illegible] இதை வைத்து கொண்டு சட்டசபை ஏற முடியுமா? தேர்தலில் [illegible] முடியுமா? என்று நினைக்கும்பொழுது, கடந்த கால சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. காங்கிரஸ் இமயத்தில் [illegible] குமரி முனை வரை [illegible] பரவியிருந்த பொழுது, [illegible] பிரச்சார ஸ்தாபனம் [illegible] பெரிக்காவிலும் இலண்டனிலும் இருந்தது. இந்த ஸ்தாபனமானது காங்கிரஸின் கொள்கையையும், கோட்பாட்டையும் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தது.

ஒரு காலத்தில் மகாத்மா காந்தி இந்த ஸ்தாபனங்களையெல்லாம் மூடவேண்டுமென்று எண்ணினர். அப்பொழுது இங்குள்ள டாட்டா, பிர்லா, பஜாஜ், டால்மியா போன்ற பண முதலைகள் இங்கிருந்து பணத்தை அனுப்பி அந்த ஸ்தாபனங்களை நடத்த உதவினர். ஆனால், பம்பாயிலுள்ள தி. மு. கழகத்திற்கு சென்னையிலிருந்து ஒரு சல்லிக் காசுகூட அனுப்புவதில்லை. அதற்கு மாறாக, நாங்கள் கேட்கும் பொழுதெல்லாம், பொருளை வாரி வாரி கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

அதோடு மட்டுமல்ல; அன்று எந்தக் காரியத்தைச் செய்யக் காத்திருக்கிறோமோ, அதே வேலையை பம்பாய் தி. மு. கழகம் செய்கிறது. திராவிட நாடு பிரிவதற்கு பம்பாய், ஆமதாபாத் தி. மு. கழகக் கிளைகள் ஒரு பிரச்சார ஸ்தாபனமாக அமைந்திருக்கிறது.

நமது திராவிட நாட்டுக் குரலை ஆந்திரம் ஆதரிக்கிறதா? சென்னை செவி சாய்க்கிறதா? கேரளம் கேட்கிறதா? கன்னடம் காது கொடுக்கிறதா?—என்று கேட்கும் நமது மாற்றுக் கட்சியினருக்குக் கூற ஆசைப்படுகிறேன் எங்கும் கேட்கிறது திராவிட நாட்டுக் குரல்; பம்பாயிலும் கேட்கிறது; ஆமதாபாதிலும் கேட்கிறது: கேரளம் கேட்கிறதா என்றால், கேட்கிறது—டில்லி பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருக்கும் அம்மணி மாம்பள்ளி பாராளுமன்றத்திலே கேட்கிறார்; அவர் கேரள நாட்டைச் சேர்ந்தவர்.

இந்தியா பெரிய உபகண்டம்; [illegible] வடக்கே விரிந்து தெற்கே [illegible] குறுகியிருக்கிறது.

ஆனால் இந்தியாவின் 5 ஆண்டுத் திட்டத்திலே வட இந்தியாவில் ஏராளமான பணம் செலவழிக்கப்படுகிறது. தெற்கே வர, வர செலவு செய்யும் தொகை குறைந்து [illegible]

ஹீராகுட் அணைக்கட்டிற்கு ரூ 156 கோடி செலவு செய்யப்படுகிறது. இந்த 156 கோடி ரூபாயில் நாம் கொடுக்கும் வரி கலந்திருக்கிறது. எப்படி?

ஒரு அரிக்கன் லேட்டை எடுத்துக் கொள்ளுங்கள்—அதன் விலை ரூ. 7 என்று விற்கிறார்கள்; இதில் ரூ பாயில் ரூ 3½ டெல்லிக்குச் செல்லுகிறது.

இங்கிலாந்தில் ஒரு அரிக்கன் லேட்டின் அடக்க விலை ரூ 2; லேட்டுகளைத் தருவிக்கும் வியாபாரி ரூ. 1—8—0 அதிகம் வைத்து ரூ. 3½ என்று விற்கிறான்; அதோடு, சில வரிகளின் மூலம் ரூ 3½ வசூல் செய்து, இந்தியாவில் ஒரு அரிக்கன் லேட்டின் விலை ரூ 7 என மாறுகிறது.

அதேமாதிரி ஒரு பீடியின் விலையில் அரைதம்பிடி டெல்லிக்குச் செல்லுகிறது. பீடித் தொழில் நடத்த நிலம் வாங்க வேண்டுமானால் ம்; ரெவினியூ வரி கொடுக்கிறோம் அதுவும் டெல்லிக்குச் செல்லுகிறது.

வாங்கிய நிலத்தில் புகையிலை விதைக்க விதை வாங்கினால், அதற்கு விற்பனை வரி செலுத்துகிறோம் அந்த விற்பனை வரியும் டெல்லிக்குத் தான் செல்கிறது.

விதைத்துப் பயிராக வளர்ந்த பிறகும் நிலத் தீர்வை கட்டுகிறோம்; அதுவும் டெல்லிக்குத்தான் செல்லுகிறது.

புகையிலை விளைந்து அதை அறுத்து பீடியாகச் சுற்றுவதற்கும் வரி கொடுக்கிறோம்; அந்த வரியும் டெல்லிக்குத்தான் செல்லுகிறது.

எல்லா வேலையும் முடிந்து, வியாபாரத்தில் லாபம் கிடைத்துவிட்ட தென்றால்; அதற்கும் வருமான வரி செலுத்துகிறோம்; அந்த வருமான வரியும் டெல்லிக்குத் தான் செல்லுகிறது.

வியாபாரத்தில் லாபம் கிடைத்தால்தான் வருமானவரி செலுத்துகிறோம். நஷ்டம் ஏற்பட்டு கடையை மூடுகிறோம் என்றாலும் முனிசிபல் வரி செலுத்த வேண்டியிருக்கிறது.

இப்படி எல்லாத் துறைகளிலும் வசூலிக்கப்படும் வரி, அந்த ஹீராகுட் அணைக்கட்டிற்குச் செலவு செய்யப்படும் ரூ. 156 கோடி ரூபாயில் கலந்திருக்கிறது. இது வட இந்தியாவிலுள்ள ஒரு அணைக்கட்டு.

இனி இதே 5 ஆண்டுத் திட்டத்தில், தெற்கேயும் அணைக்கட்டுகள் கட்டப்படுகின்றன. அதைப் பார்ப்போம்.

ஹீராகுட் அணைக்கட்டிற்கு ரூ 156 கோடி செலவு செய்யும் இந்திய சர்க்கார், பக்ராநங்கல் அணைக்கட்டிற்கு ரூ 92 கோடி செலவு செய்கிறது; துங்கபத்திரா அணைக்கட்டிற்கு ரூ 49 கோடி; அதற்கும் கீழ் தமிழ் நாட்டில் நுழைந்தால பவானி சாகர் அணைக்கட்டிற்கு ஒன்பதே கோடி ரூபாய்; இனி கேரள நாட்டிற்குள் சென்றால், அங்[illegible] ரூ. 1[illegible] கோடி—அதுவும் ஒழுங்காக கட்டி முடிக்கப்பட்டதா? இல்லை! பணமில்லை என்று வேலை நிறுத்தப்பட்டது. அணையைக் கட்டி முடிப்பதற்குள் பணம் காலியாகிவிட்டது. [illegible] [illegible]

கழகக் கூட்டம்

★

விழுப்புரம்

22—11—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு

இடம்: சண்முகம் பூங்கா அருகில்

பேச்சாளர்:

ப. உ. சண்முகம்

அணைக்கட்டிற்குப் பணமே கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக, ‘ஏக்கருக்கு ரூ 700 கொடுங்கள்; நாங்கள் அமராவதி அணைக்கட்டைக் கட்டி முடிக்கிறோம,’ என்று கூறுகிறார்கள்,

இனி மணிமுத்தாறு அணைக்கட்டைப் பார்ப்போம். அதற்கும் பணமே கொடுக்கவில்லை.

நினைவிலிருத்திக் கொள்ளுங்கள்—எனது மதிப்பிற்குரிய தோழர்களே! ஹீராகுட் அணைக்கட்டிற்குச் செலவு செய்யப்படும் தொகை ரூ 156 கோடி ரூபாய்; தெற்கே வரவரச் செலவு தொகை குறைந்து, கடைசியில், ‘ஒன்றுமில்லை’ என்று கையை விரிக்கக்கூடிய அளவுக்கு, இந்தியாவின் 5 ஆண்டுத் திட்டம் அமைந்திருக்கிறது.

இதைத்தான் நாம் எதிர்பார்த்தோமா? இதுதான் நியாயமா? தென்னாட்டை, ஏன் டில்லி ஏகாதிபத்தியம் மாற்றாந்தாய் மனப்பான்மையில் பார்க்க வேண்டும்? நிலத்தை வாங்கி, புகையிலை பயிர் செய்து, வியாபாரம் செய்து, வியாபாரத்தில் நஷ்டம் ஏற்படும் வரை வரி செலுத்துகிறோம், நாம்; நமது வரிப்பணத்தில் இயங்கும் இந்திய சர்க்கார், நமக்கு செலவு செய்யும் தொகை மிகமிகக் குறைவு. அதைவிட வடநாட்டில் செலவு செய்யப்படும் தொகை ஏராளம்—ஏராளம்.

இதைத்தான், திருவிதாங்கூர்—கொச்சி பகுதியிலிருந்து வெற்றி பெற்றுச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் அம்மணி மாம்பள்ளி கேட்கிறார், பாராளுமன்றத்தில்— ‘எங்களுடைய வரிப்பணத்தில் வடநாடு வளமாகிறது; தென்னாடு தேய்கிறது’—என்று!

கேரளத்தில் நமது குரல் கேட்கவில்லை யென்று எப்படிக் கூறமுடியும்? டில்லி பாராளுமன்றத்தில் அம்மையார் முழங்குகிறார்களே, அது அன்று முழக்கத்தின் மறு பதிப்பு தானே! கேரளம் கேட்கவில்லை என்று கூற முடியுமா? இது மட்டுமா? இதைவிட இன்னும் அதிகமாக ஒலிக்கிறது நமது குரல் கேரளத்தில்!

கடந்த தேர்தலின்போது கேரளத்திற்குச் சென்றிருந்தபோது திகைக்கும்படியான ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. கேரளத்தின் வீதிகளிலே பவனி வரும்பொழுது, அங்குள்ள சுவர்களில் “குஜராத்தியே வெளியே போ’ என்று எழுதப்பட்டிருந்தது. இது எதைக் குறிக்கிறது? ‘கேரளம் கேட்கவில்லை’ என்று கூற முடியுமா?

ஆந்திரம் ஆதரிக்கிறதா? ஏன் ஆதரிக்கவில்லை? ஆந்திரம் ஆதரிக்கவில்லையென்றால், தனியாகப் பிரிந்து ஆட்சி நடத்துமா?

(3-ம் பக்கம் பார்க்க)

[illegible]

[illegible] தோழர் [illegible] எம். [illegible] அவர்கள் [illegible] (தி. மு. க.) [illegible]